Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் - சோபகிருது பங்குனி 17 ஆம் நாள் துல்கஃதா 15 (30 3-64) திங்கட்கிழமை இதழ் 49

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	1 -00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

"கட்டாய ஓய்வு உத்தரவு நிறுத்தப்பட வேண்டும் ★ அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறுக ★ பார்லிமெண்டை உடன் கூட்ட வேண்டும்"

தமிழரசுச் செயற்குழுவின் முக்கிய தீர்மானங்கள்

"பிரச்னைக்கு தீர்வுகாணும்வரை அரசாங்கத்துடன் பேச்சு கிடையாது"

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு அனுப்பப்படும் கட்டாய ஓய்வு சம்பந்தமான உத்தரவுகள் நிறுத்தப்பட வேண்டுமென்று தமிழரசுக் கட்சியின் செயற் குழு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள கட்டாய ஓய்வு சம்பந்தமான உத்தரவுகள் வாபஸ் பெறப்பட்டு; அரசாங்கத்தின் மொழிக்கொள்கையின் விளைவாக கட்டாய ஓய்வினால் பாதிக்கப்படும் சகல உத்தியோகஸ்தர்களையும் மீண்டும் சேவையில் அமர்த்த அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் செயற்குழு தெரிவித்துள்ளது. இது சம்பந்தமான பிரச்னைகளில் அரசாங்கம், சந்தேகமெதுவுமின்றி தனது நல்லெண்ணத்தை தெளிவாகச் செயல் மூலம் காட்டும்வரை அரசாங்கத்துடன் எந்தவிதமான பேச்சு வார்த்தைகளிலுமோ அல்லது உடன்பாடுகளிலுமோ தமிழரசுக்கட்சி நிச்சயம் கலந்து கொள்ளமாட்டாதென்றும் தமிழரசுக்கட்சியின் செயற்குழு உறுதியாக தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில், தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் கடந்த சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வட, கிழக்கு மாகாணங்களிலுமுள்ள எம். பி.க்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பல முக்கிய பிரச்னைகள் பற்றி நீண்ட நேரம் வரை விவாதிக்கப்பட்டன.

ஒழுங்கற்ற நிர்வாகத்தினாலும் ஆற்றலின்மையினாலும் தாங்களாகவே தேடிக்கொண்ட நிர்வாகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தியது குறித்து அரசாங்கத்தை இக்கமிட்டி வன்மையாகக் கண்டிக்கின்றது. பார்லிமெண்ட் கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல், பாராளுமன்ற முறைக்கே அவமானத்தை தேடிக்கொடுக்கும் வகையில் பார்லிமெண்டை நீண்ட காலத்துக்கு ஒத்தி வைத்தது குறித்து இக்கமிட்டி அரசாங்கத்தை கண்டிக்கிறது.

தமிழ்-சிங்கள பிரச்னை தோன்றிய காலத்திலிருந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஜனநாயகமற்ற முறையிலும் எதேச்சாதிகார நீதியிலும் நடந்து கொண்டு பார்லிமெண்டை ஒத்தி வைத்து வந்திருக்கின்றன என்பது தெளிவு. பொதுமக்களின் உரிமைக் குரலாகவிளங்கும் பார்லிமெண்டை உடனடியாகக் கூட்டி அவசரகாலச்சட்டத்தை வாபஸ் பெறும்படியும் தமிழரசுக்கட்சியின் செயற்குழு அரசாங்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

கூட்டு அரசாங்கம் பற்றி

ஐக்கிய இடதுசாரிகள் இன்று ஆலோசனை

சமசமாஜக் கட்சியில் அபிப்பிராயபேதம்?

கொழும்பு, திங்கள்

கூட்டு அரசாங்கம் அமைக்கும் முயற்சி பற்றி இன்று ஐக்கிய இடதுசாரி முன்னணி கூடி ஆலோசிக்கவிருக்கிறது. இது சம்பந்தமாக லங்கா சமசமாஜக்கட்சி நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியது.

பிரதமருடனும் மற்ற முக்கிய மந்திரிகளுடனும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரத்தை டாக்டர் என். எம். பெரேரா மத்திய கமிட்டிக்குத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற விஷயங்களின் விபரம் வருமாறு:

அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியை அரசாங்கம் பொறுப்பேற்பது. சகல வங்கிகளையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது, ஏஜன்சி ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்துதல், அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமை, தொழிற்சாலைகளிலும் அரசாங்க இலாகாக்களிலும் தொழிலாளர்களின் நிர்வாகத்தை ஏற்படுத்துதல், நிர்வாக விதி முறைகளால் அரசாங்க சேவையிலிருந்து பிற்போக்கு சக்திகளை ஒழித்துக்கட்டுதல், பொருளாதாரத் திட்டம் வகுத்தல், சிறுபான்மையினருக்கு மொழி உரிமை உட்பட ஜனநாயக உரிமைகளைவழங்குதல்.

லங்கா சமசமாஜக் கட்சிக்கு மூன்று மந்திரிப் பதவிகள் அளிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டதாக கமிட்டிக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இது ஏற்றுக்கொள்ளப் படக்கூடாது என மூன்று அதிகப்படியான வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது.

ஜனநாயக உரிமைகள் என்ற பிரிவின் கீழ் தமிழர்களுக்கு அவர்களது மொழி விஷயத்தில் சலுகைகள் அளிக்க அரசாங்கம் விரும்பியுள்ளதாக மத்திய கமிட்டிக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

கட்சியின் நடுவழிக் கோஷ்டி

(6-ம் பக்கம் பார்க்க)

விமான விபத்து

45 பேர் மாண்டனர்

ரோம், மார்ச் 29

இத்தாலிய விமானமொன்று எரிமலை ஒன்றுடன் மோதி நொறுங்கி விழுந்ததில் 45பேர் கொல்லப்பட்டனர். இந்த விமானத்தில் உல்லாசப்பிரயாணிகள் இருந்தனர்.

மேலதிக இரு வர்த்தக விடுமுறைகள்

கொழும்பு, ஞாயிறு

மேமாதம் 26-ம்திகதியையும் ஜூன் மாதம் 24-ம் திகதியையும் தொழில் சமூக சேவை மந்திரி வர்த்தக விடுமுறை தினங்களாக பிரகடனப் படுத்தியுள்ளார். இவ்விரு நாட்களும் ஏற்கனவே, அரசாங்க, வங்கி விடுமுறை தினங்களாக்கப்பட்டுள்ளன.

இன்று

வண்ணை வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகோற்சவப் பூர்த்தி 22-ம் நாள் இரவு 8 மணிக்கு வைரவருக்கு விசேஷ பூசை.

ஷேக்ஸ்பியர் 400-வது ஆண்டு கொண்டாட்டம்

இலங்கை கலைக்கழகத்தின் விரிவான ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

மகாகவி ஷேக்ஸ்பியரின் 400-வது வருட கொண்டாட்டங்களை இலங்கையில் விரிவான முறையில் நடத்த இலங்கை கலைக்கழகம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

ஏப்பரல் 23-ம் திகதி கொழும்பு ரோயல் கல்லூரியில் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபலிலவா தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகும்.

இக்கூட்டதில் ஷேக்ஸ்பியரைப்பற்றி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திரு. சி. ராஜசுந்தரம், திரு. ஏ. ஜே. குணவர்த்தனா, திரு. ரெஜி சிறிவர்த்தனா ஆகியோர் உரை நிகழ்த்துவர். இறுதிநிகழ்ச்சியாக 'ரோமியோவும் ஜூலியட்டும்' என்ற ஆங்கில நாடகத்தைத்தழுவிய 'ரத்து ரோசா' என்ற சிங்கள நாடகம் இடம் பெறும்.

யாழ்ப்பாணத்தில்

இக்கொண்டாட்டத்தையொட்டி அடுத்த மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். மேமாதத்தில் மாணவர்களின் நாடக நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

ஒருகண்காட்சியையும் நாடக விழா வாரத்தையும் நடத்த இலங்கை கலைக்கழகம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

12 வருடங்களின் பின் பலி கொடுக்கப்பட்டது

ஐயனார் கோவிலில் நள்ளிரவில் நடந்த சம்பவம்

யாழ்ப்பாணம், திங்கள்

பன்னிரண்டு வருடங்களுக்குப்பின்னர், நேற்று முன்தினம் நள்ளிரவு சுன்னாகம் ஐயனார் கோவிலில் உயிர்ப்பலி கொடுக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது! பலி கொடுக்கும் செயலைத் தடுக்கும் வகையில் கோயிலில் காவலபுரிந்த பன்னிரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் கண்களில் படாமல், வீரபத்திர கோயில் வாசலில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட கோயிலில் கடந்த 12 வருடங்களாக உயிர்ப்பலி கொடுப்பது நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வருடம், பலி கொடுப்பதில் ஒரு பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்ததைக் கருதி அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழா வண்ணம் கோவிலின் புதிய மனேஜர், சுன்னாகம் பொலிசாருக்கு முறையிட்டதன் பலனாக நேற்று மாலை 12 கோவில் கான்ஸ்டபிள்களும் ஒரு சார்ஜனும் கோவிலுக்கு காவலபுரிய வந்தனர். இவர்கள் இங்கிருந்த பொழுதிலும் நேற்று நள்ளிரவு 1 மணியளவில் சிலர் ஒரு ஆட்டை உயிர்ப்பலி கொடுத்திருக்கின்றனர். இது விஷயமாக பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

மணிவாக்கு

மனத் தூய்மையை விரும்புவரின் அருட்சொற்கள் காரணமாக மன்னரும் அவரது நண்பராவார்.

— பெரியோர்வாக்கு

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

ஈழநாடு சோபகிருது ஆண்டு பங்குனி மீ 17 உ. (30-3-64)

இலங்கை அரசியல் நிலைமை

சர்வாதிகார ஆட்சி இலங்கையில் ஏற்படத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று பிரதமர் ஸ்ரீமாவோ பகிரங்கமாக ஒருகூட்டத்தில் அறிவித்திருக்கிறார். இதை ஜனநாயகதர்மத்தில் நம்பிக்கையுள்ள எல்லாரும் பெரிதும் வரவேற்பர்.

ஆனால் இந்த உறுதிமொழியால் மட்டும் பொதுமக்கள் திருப்தி அடைய முடியாது. நம்நாடு அரசியல் விடுதலை பெற்றபின் சென்ற 16 ஆண்டுகளிலே உண்மை ஜனநாயகத்துக்கு மாறாகப் பலபல தவறுகளும் அரசியல் பாவங்களும் செய்யப்பட்டுள்ளன. கட்சி சுயநலம், அனுபவமின்மை முதலிய காரணங்களால் இந்தத் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். காரணம் எதுவாயினும் நாட்டுமக்களில் பலர், இத்தவறுகளின் பயனாக பலவித இன்னல்களுக்கு உட்பட்டுள்ளனர். அடிப்படை மனித உரிமைகளும் பலருக்கு மறுக்கப்பட்டுள்ளன.

இதனால் சமூக ஒற்றுமை குலைந்து நாட்டிலே அமைதியின்றி, பலகேடுகளும் ஏற்பட்டுள்ளன. அருமையாகக் கிடைத்துள்ள சுதந்திரமும் பறிபோய்விடுமோ, ஜனநாயகத்தை நடத்திவைக்க நமக்குப் போதிய தகுதியும் திறமையும் இல்லையோ என்ற ஐயப்பாடும் கிளம்புவதாக இருக்கின்றது. பன்முறை இங்கு அவசரகாலத்தைப் பிரகடனம் செய்ய நேரிட்டதும் இப்போதும் அவசரகால ஆட்சிக்குட்பட்டே நாம் இருப்பதும் மகிழ்ச்சியோ பெருமையோ அளிக்கக்கூடியதல்ல. அவசரகால ஆட்சியும் ஜனநாயகத்துக்கு மாறுவதுடன் தற்காலிகமான ஒருவித சர்வாதிகார ஆட்சியேயாகும்.

இதேசமயம் பார்லிமெண்ட் சபையும்கூட நான்கு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது, மக்கள் மனதிலே பல பீதிகளை ஏற்படுத்துவதாகும் இந்த ஒத்திவைப்புக் கான தக்க காரணங்களை இதுவரை பிரதமரோ அல்லது அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த யாரோ கூறவில்லை. சென்ட்சபையிலே பிரதமர் விளக்குவாரென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அன்று பிரதமர் சபைக்கே செல்லாமலிருந்துவிட்டார் இது பலருக்கும் பெரும் ஏமாற்றமளித்தது. சர்வாதிகார ஆட்சி முதலிய பல்வேறு வதந்திகளும் தப்பெண்ணங்களும் கிளம்பவும், இதுதான் காரணமாகும்.

கூடுமானவரை எல்லா முக்கிய அரசியல் கட்சிகளுமடங்கிய தேசிய அரசாங்கத்தை அமைக்கப் பிரதமர் முற்படுவதாகவும், அதனாலேயே சபை பலமாதங்கள் ஒத்திவைக்க நேரிட்டதாயும் கூறப்பட்டது. இவ்விஷயமாக பிரதமர் இதுவரை எதுவும் வாய்விட்டுக் கூறவில்லை. தேசிய அரசாங்கமோ அதுமுடியாவிட்டால் ஒத்துழைக்க விரும்பும் கட்சிகளின் ஆதரவுடன் ஒரு கூட்டு மந்திரிசபையோ அமைக்க முயற்சிகள் நடப்பதாவெும்இப்போது பலவதந்திகள் அடிபடுகின்றன. இம்முயற்சியை ராஜாஜியும் பாராட்டி வரவேற்றுள்ளதாகத் தெரிகிறது, இதுபற்றிய முக்கிய பேச்சுகள் அந்தரங்கமாக நடைபெறுகையில் திட்டமான அறிக்கைகளை வெளியிடுவதுதான் சரியல்ல. என்றாலும் பார்லிமெண்ட் சபையை சீக்கிரத்தில் கூட்டுவதுதான் வீண்வதந்திகளும் பீதிகளும் குறைய வழிசெய்யும்.

உண்மை ஜனநாயகத்தின் மகிமை என்ன? ஒரு தனிப்பட்டவரின் நன்மைக்கும் தன் மானத்துக்கும் பாதகம் ஏற்படாமல் பாதுகாப்பதுதான் என்பார் காந்தி அடிகள். ஆனால் இங்கு ஜனநாயகமென்பது பெரும்பான்மை சமூகத்தின் ஆட்சியென்றும் அவர்களது நன்மையைப் பாதுகாப்பின் அது போதுமென்றும் ஓர் ஆபத்தான கருத்து ஆளும்கட்சியின் மனதில் புகுந்து பல விபரீதங்களைச் செய்துவிட்டது. இத்தவறை மந்திரிகள் நன்கு உணர்ந்துள்ளனரா என்பதுதெரியவில்லை. என்றாலும் மொழிப் பிரச்னையைத் தீர்த்தால்தான் நாடும் முன்னேற முடியுமென்று நிதி அமைச்சர் ஒரு கூட்டத்தில் கூறியிருப்பது மந்திரிசபையின் மனமாற்றத்தைக் காட்டுவதாகுமா? வெறும் பேச்சுடன் இன்றி காரியபூர்வமாக இதைக் காட்டுவதாயின் சிறுபான்மை சமூகங்களின் ஆதரவையும் பெற்று இங்கு ஜனநாயகம் வெற்றிபெற புதிய வழிபிறப்பதாகும்.

'தமிழ்பற்றையும், தேசப்பற்றையும் ஊட்டினார் திரு. பொன்னையா'

நினைவு தின விழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஈழத்திருநாட்டில் வாழும் தமிழ் மக்களிடம் மிகுந்துள்ள ஆராத் தமிழ்ப் பற்று குன்றாச் கடரௌ இலங்குகின்றது. இளம் பிள்ளைகளின் இதயத்தில் கட்டற்றுப் பாயும் தமிழ் உணர்ச்சிக்கும் அவர் தம் உணர்ச்சியில் வேகத்திற்கும் கடந்த 28-3-64 சனிக்கிழமை காலை தொடங்கி மாலை 10 மணி வரையில் நடந்த 'ஈழகேசரி'ப் பொன்னையாவின் நினைவு விழா நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டாக விளங்கின.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியில் பங்குகொள்வதற்கு யாழ்ப்பாணக் குடா நாட்டைச் சேர்ந்த பல பகுதிகளிலும், புத்தளம், மன்னார்ப் பகுதியிலிருந்தும் மாணவ, மாணவிகள் வந்திருந்தனர்.

2-45 அளவில் திரு ரீ. முருகேசம்பிள்ளை தலைமையில் பரிசளிப்பு வைபவம் ஆரம்பமானது. தனாதிகாரி திரு. இராசரத்தினத்தின் வரவேற்புரைக்குப் பின் காரியாதிகாரி முருகேசம்பிள்ளை நிகழ்த்திய தலைமையுரையின் சுருக்கம் வருமாறு:-

"திரு. பொன்னையா அவர்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக ஈழநாட்டில் தமிழ் வளர்க்கும் ஈழகேசரிப் பத்திரிகையைத் தொடங்கினார். இப்பத்திரிகையின் மூலம் ஈழநாட்டு மக்களின் இதயங்களில் தமிழ்ப் பற்றையும், தேசப் பற்றையும் ஊட்டினார். இவர் செய்த சமூகப் பணிகள் சிலவற்றில் அவருடன் இணைந்து செயலாற்றக்கூடிய சந்தர்ப்பம் என் வாழ்விலும் நேர்ந்துள்ளது.

அன்றைய கல்வி அமைப்பு முறையில் ஆங்கிலமே முக்கியமான மொழியாக கல்லூரிகளனைத்தும் புகட்டிவந்தனர். ஆங்கிலத்திலே தமிழ்ப் பற்றுக் குன்றிக்கிடந்தது. தமிழ்க் கலாச்சாரம் நசிந்துவிட்டது. திரு. பொன்னையா அவர்கள் தனது பத்திரிகையின் மூலம் தமிழ்ப் பற்றை நாட்டுக்கு ஊட்டினார்.

மேற்பிரிவுப் பகுதியினர் பேச்சுப் போட்டி சன்மார்க்க சபை மண்டபத்திலும், கீழ்ப்பிரிவுக்கான போட்டி குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையிலும் நடைபெற்றன.

மதியம் 1-00 மணி தொடக்கம் 2-00 மணிவரைக்கும் நினைவு விழாவிற் கலந்துகொண்டவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டது.

பரிசுகள் பெற்றவர்கள் விபரம்

மேற்பிரிவு

1-வது இடம்: செல்வி அ. அருணேஸ்வரி-வயாவிளான் அரசினர் மத்தியமகாவித்தியாசாலை: இவருக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது

2-வது இடம்: செல்வன் க. பரஞ்சோதி-உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி-வெள்ளிப்பதக்கத்தை இவர் பரிசாகப் பெற்றார்.

3-வது இடம்: செல்வி பொ. பார்வதி-கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை. இவருக்குப் பரிசாக புத்தகங்கள் வழங்கப்பட்டன.

தகுதிப் பரிசாக புத்தகங்கள் பெற்றவர்கள் வருமாறு:-

திருநெல்வேலி கிழக்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த செல்வி ரி. ஜயகுமாரி.

வயாவிளான் அரசினர் மகாவித்தியாசாலை மாணவி செல்வி சி. காஞ்சனாதேவி.

திருநெல்வேலி சனசமூகநிலையத்தைச் சேர்ந்த செல்வன் இ. இராசகுமார்.

கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலை மாணவன் செல்வன் செ. நவரத்தினம்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் க. மகாத்மாசீலன்.

கல்லெலியா மகளிர் அரபிக்

(5-ம் பக்கம் பார்க்க)

நாட்டிலும் நகரிலும்

கடந்த சில வாரங்களாக சங்கக்கடைகள் மூலம் துணி விநியோகம் செய்து வருகிறார்கள். ஒரு கூப்பனுக்கு நாலு யார் துணி வழங்கப்படுகிறது. கிராமப் புறங்களில் வசிப்பவர்களுக்கு இது பெரிய வரப்பிரசாதம் என்று கூறவேண்டியதில்லை. பெண்களுக்குப் பிடவைகளும் ஆண்களுக்குக் கரை வேஷ்டிகளும் கொடுபடவில்லை என்பது ஒரு குறைபாடு. சீத்தை முதலிய சட்டைத் துணிகளும், வெள்ளைக் காரிக்கன் பீஸ் துணிகளும், சாரங்களும், துவாய்த் துண்டுகளும் கொடுபடுகின்றன. ரஷ்யன் பீஸ் என்ற பெயருடன் ஒரு சாதி வெள்ளைத்துணி சில சங்கக்கடைகளில் கொடுபட்டதாம். இதற்கு ஏகபபட்ட கிராக்கியாம். எல்லோருக்கும் இந்தத்துணி கிடைககவில்லையே என்றும் ஒரு குற்றச்சாட்டு. சங்கக்கடையில் வேலை பார்ப்பவர்களே தங்களுக்கும் தங்கள் சொந்தக்காரருக்கும் இந்தத்துணியை உபயோகப் படுத்திக் கொண்டார்கள் என்ற கதை ஊரெல்லாம் உலாவுகிறது.

பொது மக்களோடு தொடர்புள்ள எந்தப் பொது ஸ்தாபனத்தின் மீதும் கைலஞ்சம், பாரபட்சம், ஒழுங்கீனம் முதலிய பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது சகஜம். தபால் சேவை, ரயில்வே, இ. போ.ச., கச்சேரி, பொலிஸ் இவற்றின் மீது குற்றக் கணைகள் ஏற்படாட நாள் கிடையாது. மிகக் கொடூரமான தாக்குதலுக்குட்படுவது சங்கக்கடைதான். மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை சகாய விலையில் கொடுக்கும் ஒரு ஸ்தாபனம் நிச்சயமாக பல திசைகளிலிருந்து எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியே வரும்.

பொது ஸ்தாபனங்களைக் கண்மூடித் தனமாகத் திட்டுவது எங்கள் சமுதாயத்தில் ஒரு வழக்கமாய்ப் போய்விட்டது - ஆரு ஃபாஷன் என்றும் கூறலாம். அதிருப்தியடைந்த ஆத்மாக்கள் சில, 'அவன் கைதக்கூலி வாங்குகிறான், இவன் கொள்ளையடிக்கிறான், அவருக்குப்பசை பூசவேண்டும்' என்று சதா வக்கணை பாடிக்கொண்டேயிருக்கும். அது ஒரு புறமிருக்க, சங்கக்கடைகளில் ஊழல்மலிந்து கிடப்பதுபொதுவாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படும் விஷயம். ஆத்திரம் மீறிய அன்பர்கள் சிலர் அவற்றிற்கு சங்கடக்கடைகள், சங்கயீனக்கடைகள் என்றும் பட்டம் சூட்டியிருக்கிறார்கள்! 'சில சங்கக் கடைகள் பெருகிப் பொலிந்து விளங்குகின்றன. அவற்றில் அரிசி, மாவு, சீனி மட்டுமல்ல இரும்புச் சாமான்களும், துணிமணிகளும் கூட விற்பனையாகின்றன. அவை வான் வைத்து ஓடுகின்றன. பேக்கரி வைத்து பாணும் பிஸ்கோத்தும் தயாரிக்கின்றன. சில கடைகளோ ஒளி மழுங்கிப் பொலிவிழந்து காணபபடுகின்றன. மாவுக்குக் கூட சில சமயம் தட்டுப்பாடு வந்து விடுகுறது. இதற்குக் காரணம் ஒழுங்கீனமும் ஊழலும் தானே' என்று அவர்கள் கேட்பதில்நியாயமிருக்கிறது.

சங்கக் கடைகள் ஊர்ப் பொது மக்களால் நடத்தப்படுவன. அவற்றின் நிர்வாகத்தில் ஊர்ச் சனங்கள் எல்லோருக்கும் பங்குண்டு. ஒரு கடையை மேம்படச் செய்வதோ கீழ்ப்படச் செய்வதோ அதன் அங்கத்தவர்கள் கையில் தாவிருக்கிறது. ஒரு கடையின் நிர்வாகத்தில் பிழை இருந்தால் அதைத்திருத்துவதற்கு மார்க்கமுண்டு. கூட்டுறவுப் பரிசோதகரிடம் முறையிடலாம். ஆனால் அவரை மிஞ்சியும் சில வேலைகாரியங்கள் நடைபெறுவதுண்டு. ஆகையினால் பொதுக் கூட்டம்கூடி சங்கத்திலுள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டி அப் பிழைகளுக்குப் பொறுப்பான சிப்பந்திகளையோ நிர்வாகஸ்தர்களையோ மாற்றிவிட வேண்டியது தான் சரியான வழி.

சில சங்கக் கடைகளில் துப்புரவாக ஒரு யார் துணியாவது கொடுபடவில்லை. காரணமென்னவென்றால் துணி வாங்குவதற்கு அவர்களிடம் போதிய பணமில்லை. பணம் கொடுத்தால் தானே யூனியனும் துணி கொடுக்கும்? மற்றக் கடைகளிலெல்லாம் துணி கொடுபட தங்கள் கடையில் மட்டும் துணி இல்லையென்றால் எவருக்கும் ஆத்திரம் வரத்தான் செய்யும். சங்கக்கடையில் பணமில்லையென்பது வெறும் நொண்டிச் சாட்டுக்கு. அரிசி, சீனி, மாவு முதலியவற்றை விற்றே ஒருகடை லாபம் காட்ட முடியும் என்பது கூட்டுறவு அதிகாரிகளின் கருத்து. லாபம் காட்ட முடியாத கடையொன்றில் ஏதோ ஒரு ஊழல் இருக்கவேண்டுமென்றே தீர்மானிக்கவேண்டும். அதற்குப் பரிகாரம், ஏற்கனவே கூறியது போல் ஊர்ச் சனங்களின் கையில் தானிருக்கிறது.

--வழிப்போக்கன்

ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே கூடிய நடுநிலைமை மகாநாட்டுக்கு எந்த நாட்டிலிருந்து அதிகமானவர்கள் வந்தார்கள் தெரியுமா? ஐக்கிய அரபுக்குடியரசிலிருந்து தான் ஐம்பத்து ஐந்துபேர் வந்ததாக ஓர் அன்பர் தெரிவித்ததும் வியப்பாக இருந்தது.

ஏன் இவ்வளவு பேர்களை கெய்ரோ இங்கு அனுப்பியது? இருபது நாடுகளுக்கு மேல் பங்குபற்றிய இம்மகாநாட்டு நடவடிக்கைகள் எல்லாம் மூன்று மொழிகளில் நடந்ததாயும், அரபு, ஆங்கிலம், பிரெஞ்சு இம்மூன்று மொழிகளிலும் ஏககாலத்தில் மொழிபெயர்த்தும், அறிக்கைகள் வெளியிட்டும் காரியங்களைச் செய்யக்கூடியவர்கள் ஐ. அ. குடியரசில்தான் இருப்பதாகவும், அனுபவமிக்க அவர்கள் இங்கு வந்து மகாநாட்டுக் காரியாலய வேலைகளை மூன்று மொழிகளிலும் திறமையாக நிறைவேற்றிவிட்டுத் தங்கள் நாட்டுக்குத் திரும்பியதாகவும் அறிந்தேன்.

* * *

நடுநிலைமை மகாநாட்டைக் கூட்டுவதா அல்லது ஆசிய ஆபிரிக்க மகாநாடா என்று ஒரு வாக்குவாதம் சமீபத்தில் கிளம்பியது. சீனமும் பாகிஸ்தானும் ஆசிய ஆபிரிக்க மகாநாடடை ஆதரித்தன. இந்தியா நடுநிலைமை மகாநாட்டை ஆதரித்தது. முடிவில் இருமகாநாடுகளையும் கூட்டலாமென்று ஒருவித சமரச யோசனை உருவாயிற்று.

கொழும்பில் கூடிய ஆ. ஆ. பூர்வாங்க மகாநாடு வெற்றிகரமாக முடிந்ததுபற்றி பீகிங்கும், ராவல்பிண்டியும் என்ன நினைக்கின்றனவோ? இது எப்படியாயினும், பெல்கிரேட்டிலே 26 நடுநிலைமை நாடுகளே கூடியிருக்கையில், இனி கெய்ரோவில் கூட இருக்கும் மகாநாட்டில் சுமார் 70 நாடுகள் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதே, நடுநிலைமைக் கட்சி பலப்பட்டுவருவதற்கு நல்ல அறிகுறியாகும்.

நடுநிலைமை நாடுகளுக்குள்ளாகவே எவ்வளவோ சங்கடங்கடங்கள், உள்நாட்டு மண்டையிடிகள், பரஸ்பரம் பலதகராறுகள்: இவற்றைத் தீர்க்க எதுவும் செய்யாமல், உலக சமாதானத்தைஇவைஎப்படிப் பாதுகாக்கப் போகின்றன என்று ஓர் அரசியல் நிருபர் கேட்கின்றார் சரியான கேள்வி.

இன்று சில வல்லரசுகள், போட்டா போட்டியுடன் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கு உதவி அளித்து வருவதைப் பார்க்கின்றோம். ஏன்? இதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும்.

"உங்கள் உதவியுடன் சேர்ந்து நீங்கள் நாசமாகப்போக" என்று இந்தோனேஷிய சுகர்ணோ ஒரு வல்லரசுப் பிரதிநிதியைப்பார்த்துச் சாபம் கொடுத்தாராம். உதவி பெறுவது காரணமாக, சுயமரியாதையுள்ள எந்த நாடும் தன் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளச் சம்மதிக்காது.

இதை வல்லரசுகள் உணர்ந்தால் அவை நடுநிலைமை விஷயமாக, அதிகம் கவனமாக இருக்கலாம் நடுநிலைமை நாடுகளின் மதிப்பும் செல்வாக்கும் உயரும். உலக சமாதானத்தைக் காக்கவும், தங்களுக்குள் நல்லுறவுகள் அதிகரிக்கவும் இந்நாடுகளுக்குப் புதிய வாய்ப்பு இருக்கும்.

நடுநிலைமைக் கொள்கைக்கு அதிக நாடுகளின் ஆதரவு கிடைக்க முடிந்துள்ளது, இலங்கையின் முயற்சிக்கு நல்லதோர் வெற்றி. எதிர்காலத்துக்கு இது நம்பிக்கையான சுபசூசகமுமாகும்.

* * *

யாழ்ப்பாண முனிவர் யோகசுவாமிகளின் மறைவைப்பற்றி

(5-ம் பக்கம் பார்க்க)

ஈராக் அதிபருடன் மந்திரிகள் பேச்சு

புதுடில்லி, மார்ச் 29

டில்லி வந்திருக்கும் ஈராக் ஜனாதிபதி அரீப்இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு நேற்றிரவு ஒருவிருந்து நடத்தினர். நேற்றுப்பகல் அவரைப் பிரதமர்நேரு சந்தித்துப் பேசினர். பின் திரு. லால்பகதூர்சாஸ்திரியும் சந்தித்தார். மாகியில் கல்விமந்திரி திரு. சக்னா பீல்ட்மார்ஷல் அரீபுடன் அரைமணி நேரம் சம்பாஷித்தார். அப்போதுகாமன்வெல்த் இலாகா காரியதரிசியும் உடன் இருந்தார். காஷ்மீர் பிரச்னை, பாகிஸ்தான்-இந்தியா உறவு ஆகியனபற்றியும் சம்பாஷணை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

ஈராக் அதிபரை முஸ்லிம் ஸ்தாபனம் ஒன்றில் தூதுகோஷ்டி சந்தித்து, இந்தியாவிலுள்ள 5 கோடி முஸ்லிம்கள் சமஉரிமையுடன் திருப்தியாக வாழ்வதாகத் தெரிவித்துக் கொண்டது.

சகவாழ்வுக்கொள்கைக்கு ஆசிய-ஆபிரிக்கசபை ஆதரவு

அல்ஜியர்ஸ், மார்ச் 29

அல்ஜியர்ஸில் கூடிய ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை சபை, சமாதான சக வாழ்வுக் கொள்கையை ஆமோதித்துள்ளது.

இங்கு கூடிய ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை மகாநாடு முடிவடைந்தது. ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை சபை; சமாதான சக வாழ்வுக் கொள்கைக்கு ஆதரவளித்திருப்பதுடன் காலனி ஏகாதிபத்திய கொள்கைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

பகுதி அணு ஆயுதப்பரீட்சை தடை உடன் படிக்கையை சபை வரவேற்றுள்ளதுடன் அணு ஆயுதங்கள் எல்லாம் அழிக்கப்படல் வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

உத்தேச நடுநிலைமை நாடுகளின் இரண்டாவது மகாநாட்டைக் கூட்டுவதை இச் சபை வரவேற்றுள்ளது. பாண்டுங் போன்ற மகாநாடொன்றைக் கூட்டுவதற்கும் சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில், பெண்கள் கருத்தரங்கமொன்றை நடத்துவது சம்பந்தமாகவும் அக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் நாடுகளுக்கு அழைப்பு அனுப்புவது குறித்தும் ரஷ்ய-சீனப் பிரதிநிதிகளுக்கிடையே "மோதல்" ஏற்பட்டது. மகாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதிநிதி, காஷ்மீர் சம்பந்தமாக எதையோ சொல்ல எழுந்தசமயம் மகாநாட்டுத்தலைவர் அவரைப்பார்த்து, "அதெல்லாம் இப்போதைக்குத் தேவையில்லை நீங்கள் உங்கள் ஆசனத்தில் அமருங்கள்" என்றார்.

இனக்கலவரங்கள்

இந்திய-பாக். பேச்சுக்கள் ஏப்ரலில் நடைபெறும்

புதுடில்லி, மார்ச் 29

இனக்கலவரங்கள் சம்பந்தமாக இந்திய-பாகிஸ்தான் உள்துறை மந்திரிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்று இலாகாவற்ற மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்தார்.

இந்திய லோக சபையில் இது சம்பந்தமாக திரு. லால் பகதூர் சாஸ்திரி மேலும் தெரிவிக்கையில்; இனக்கலவரங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்று இந்தியா தெரிவித்திருந்த யோசனைக்கு பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்திருப்பது குறித்து பாரதம் மகிழ்ச்சியடைகிறதென்றும் இப்பிரச்னை சமுகமாகத் தீர்க்கப்படல்வேண்டும் என்றும் கூறினர்.

சம்பந்தப்பட பேச்சுவார்த்தைகள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் புதுடில்லியில் ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டபொழுதிலும் இதற்கான திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை.

அலாஸ்கா பூகம்பத்தில் 600 பேர் மாண்டனர்!

வாஷிங்டன், மார்ச் 29

அலாஸ்காவில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக சுமார் 600 பேர்கள் மாண்டதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

ஒரு நகரில் கடல் அலைகள் தாக்கியதால் 10 பேர் மாண்டனர். பலட்சன் கணக்கானோர் காயமடைந்தனர். 50 பேர் காணப்படவில்லை.

சுவீடன், டெக்ஸாஸ், மஸாசுசட்ஸ் ஆகிய இடங்களிலும் பூகம்ப அறிகுறிகள் பதிவாகியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

எம். எஸ். ஸுக்கு ஆப்ரேஷன்

புதுடில்லி, மார்ச் 29

சிறந்த பாடகியான ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமிக்கு சப்டர்ஜல் ஆஸ்பத்திரியில் வயிற்றிலுள்ள பித்த நீர்ப்பையில் ஆபரேஷன் செய்யப்பட்டது. இன்னும் ஒருவாரம் ஆஸ்பத்திரியில் இருப்பார். ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் அங்கு சென்று எம். எஸ்.சைப் பார்த்தனர்.

ஒற்றனின் தேசபக்தி!

ஜம்மு, மார்ச் 29

தண்டனையிலிருந்து தப்ப முயன்ற ஒரு பாகிஸ்தானி ஒற்றன் மற்றொரு கான்ஸ்டபிளுடன் கோரமாக மாண்டான். இந்த ஏற்றனை பொலிசார் கட்ரா என்ற இடத்துக்குக் கொண்டுவந்தார்கள். அவனுக்குக் கைவிலங்கிட்டு ஒரு கான்ஸ்டபிளின் பெல்டுடன் சேர்த்துக் கட்டியிருந்தார்கள். நடுவழியில் அந்த ஒற்றன் கான்ஸ்டபிளையும் இழுத்துக்கொண்டு, 400 அடிக்குக் கீழிருந்த ஒரு குளத்துக்குள் குதித்துவிட்டான். இருவரும் அக்கணமே மாண்டனர்.

360 லட்சம் டன் அரிசி கிடைக்கும்

புதுடில்லி, மார்ச் 29

இவ்வாண்டில் இந்தியா 360 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுவதாய் உணவு மந்திரி திரு. ஏ. எம். தாமஸ் கூறினர்.

உப ஜனாதிபதி

புதுடில்லி, மார்ச் 29

லட்சத்தீவுகள், மினிக்காய், ஆமீன் தீவுகளில் 4 நாள் சுற்றுப்பிரயாணம்செய்த இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸர்வபல்லியின், சென்னைக்குப் புறப்பட்டார். இந்தத் தீவுகள் நன்றாக முன்னேறிவருகின்றன என்றும், அங்குள்ள மக்கள் உடல்நலம், ஒழுக்கம், கடவுள்பக்தி, ஒத்துழைப்பு மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்டிருப்பதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

டில்லியில் ருவாண்டா மந்திரி

புதுடில்லி, மார்ச் 29

ருவாண்டா நாட்டின் தகவல் மந்திரி 3 நாள் இந்தியாவில் தங்கும்பொருட்டு டில்லி வந்திருக்கிறார்.

உ. பி. தகராறு

5 நீதிபதிகள் விசாரிப்பர்

புதுடில்லி, மார்ச் 29

உத்தரப பிரதேச அசெம்பிளிக்கும், ஹைகோர்ட்டுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறைக் குறைந்தது ஐந்து நீதிபதிகள் கொண்ட சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்று விசாரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த புதன்கிழமை இதுசம்பந்தமான பூர்வாங்க வேலைகள் சுப்ரீம் கோர்ட்டில் கவனிக்கப்படும்.

எம். எல். ஏ.க்களின் சம்பள உயர்வு

சென்னை, மார்ச் 29

தமிழ்நாடு சட்டசபை அங்கத்தினர்களின் மாதச் சம்பளத்தை ரூ. 150விருந்து ரூ. 250ஆக உயர்த்தும் மசோதாவுக்கு மேல்சபை அங்கீகாரம் அளித்தது.

கீழ்ப்படியாமை அதிகரிப்பு

புதுடில்லி, மார்ச் 29

சட்டசபைகளில் இருந்து அங்கத்தினர்கள் வெளியேறுவதும், சபாநாயகருக்குக் கீழ்ப்படியாமல் நடப்பதும் இப்போது அதிகரித்துவருவதாயும் இதைத் தடுத்தாக வேண்டும் என்றும் லோக சபை சபாநாயகர் திரு. ஹுகும்சில் அறிவித்தார்.

ருந்து புறப்பட்டதாயும் வழியில் ராணி ஈ பறந்துவிட்டதாயும் அதனுடன் இதர தேனீக்களும் பறந்துவிட்டதாயும் அவர் கூறினர்.

பர்மாவில் எதிர்க்கட்சிகள் கலைக்கப்பட்டன

ஆளும்கட்சிமட்டுமே இனி இயங்கும்

ரங்கூன், மார்ச் 29

பர்மாவில் ஆளும் கட்சியான சோஷலிஸ முன்னேற்றக் கட்சியைத் தவிர, இதர அரசியல் கட்சிகளுக்குப் புரட்சி அரசாங்கம் தடைவிதித்திருக்கிறது.

இதன்படி 3 பெரிய அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டன. கட்சிகளைக் கலைக்கும்முடிவைப் பிரதமர் நீவின், அவற்றின் தலைவர்களுக்கு அறிவித்தார்.

பர்மாவை உள்நாட்டு வெளிநாட்டு அபாயங்களில் இருந்து பாதுகாக்குமுகமாகவே, தாம் இந்த நடவடிக்கை எடுத்திருப்பதாய் ஜெனரல் நீவின் கூறினர்.

மத ஸ்தாபனங்கள் நீங்கலாக நாட்டின் நன்மைக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவை எனக் கருதும் சகல ஸ்தாபனங்களுக்கும் தடைவிதிக்கவும் அரசாங்கத்தின் உத்தரவு வழிசெய்கிறது.

கலைக்கப்பட்ட அரசியல் கட்சிகள் எந்தவகையிலாவது அரசியல் தலையிட்டால், சம்பந்தப்படவர்களுக்கு ஐந்தாண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

ரயிலில் இடத்தகராறு: 6 பேர் மாண்டனர்

கத்திஹார், மார்ச் 29

பருனிக்குப் போய்க்கொண்டிருந்த அஸ்ஸாம் மெயில் சூர்சேலா ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்தபோது ஒரு பெட்டியில் ஏற்பட்ட சண்டையில் 6 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர். இதில் 12 பேருக்குப் பலத்த காயம்.

பெட்டியில் உட்காருவது சம்பந்தமாகச் சச்சரவு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

இதைப் பற்றி நேரடியாக விசாரணை நடத்தும்பொருட்டு ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் பொலிஸ் சுப்ரீண்டனும் சூர்சேலா சென்றனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் ஆந்திர பெ லிஸைச் சேர்ந்தவர் எனச் சொல்லப்படுகிற . ஆந்திராவைச் சேர்ந்த ஒரு ரிசர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள், அவரது மனைவி, ஒரு குழந்தை, ஆகியோரை, யாத்திரீகர் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் குத்தியதைத் தொடர்ந்து மோதல் ஏற்பட்டது. இதில் 4 யாத்திரீகர்கள் உட்பட 6 பேர் மாண்டனர்.

ஏராளமானோர் கைதுசெய்யப்பட்டனர்.

"தமிழ் பேசும் மக்களுக்கு நுண்கலைக் கல்லூரி வேண்டும்"

கல்வி மந்திரிக்கு தமிழ் எம்.பி.க்கள் மகஜர்

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பாடசாலையில் மேலதிக வகுப்புக்களை ஆரம்பித்தல், மட்டக்களப்பில் தொழில் நுட்பப் பாடசாலையை ஸ்தாபித்தல், சமிழ்ப்பேசும் மக்களுக்கு நுண்கலைக் கல்லூரி ஆரம்பிப்பது என்ற கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவருதல் ஆகிய விஷயங்களையிட்டு தமிழ் எம். பி. க்கள் கல்வி மந்திரிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

அவர்களது மகஜரில் சொல்லப்பட்டிருப்பதாவது:-

"1965-ல் இருந்து கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரியில் சகல போதனையினங்களும் சிங்கள மொழியில் நடைபெறவிருப்பதாக அறிகின்றோம். அப்படியாயின் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் இனிமேல் தமிழ்பேசும் மாணவர்கள் தொழில் துறையில் உயர் கல்வி பெற முடியாத நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் உயர்கல்வி நசுக்கப்படுவதனை உணர்ந்தே காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் திரு. தகநாயக்காவும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பப் பாடசாலையை சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாக்கத் தரம்உயர்த்த ஒப்புக்கொண்டு உறுதி அளித்திருந்தனர். ஆனால் அவர்களின் வாக்குறுதி இன்று காற்றில் பறக்கின்றது.

தொழில்நுட்பக் கல்வி விசாரணைக்குழுவினரின் அறிக்கை வெளியிடப்பட்டும் யாழ்ப்பாணம்தொழில்நுட்பப்பாடசாலை, மட்டக்களப்பு தொழில்நுட்பப் பாடசாலை விஷயமாகத் தரம் உயர்த்தவும், ஆரம்பிக்கவும் ஓர்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பாடசாலையைத் தரம்உயர்த்தத் தாமதித்தாலும் உடனடியாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்புக்களை தமிழ் மொழியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சனிஷ்ட தொழில்நுட்ப வல்லுநர் போதனையினம், அளப்போரும் மட்டம் பார்ப்போருக்கான ஆரம்பப்போதனையினம். படம் வரையுந் தொழில் பயில்வோர் ஆரம்பப்போதனையினம், கணக்கியல் தகுதித் தேர்வுப்பத்திரப் போதனையினம், வணிகத் தகுதித் தேர்வுப்பத்திரப் போதனையினம், தமிழ் தட்டெழுத்தாளர் போதனையினம் ஆகிய ஆறு வகுப்புக்களையும் உடன் ஆரம்பிக்க முயற்சிக்கவேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு கனிஷ்ட தொழில் நுட்பப்பாடசாலையை ஆம்பிக்க வேண்டுமென காலஞ்சென்ற பிரதமா திரு. பண்டாரநாயக்காவும், முன்னாள் கல்வி மந்திரி திரு. டபிள்யு. தகநாயக்காவும் தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று ஏழு வருடங்களுக்கு மேலாகியும் கிழக்கு மாகாணத்திற்கு ஓர் தொழில் நுட்பப் பாடசாலை ஆரம்பிக்கப்படவில்லை என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். தமிப் பகுதி புறக்கணிக்கப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

"மதத்தின்பெயரால் வகுப்புக் கலகம்"

ஜயப்பிரகாஷ் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 27

சென்ற சில நாட்களில் நடைபெற்ற வகுப்புக் கலவங்களைக் கண்டித்து ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் மட்டத்தில் இல்லாமல் இன்னும் உயர்ந்த கண்ணோட்டத்துடன் இப்பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிகள் செய்யப்படவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியிருக்கிறார்.

"சில சமயங்களில் இந்தக் கலவரங்கள் ஹிந்து மதத்தின் பெயரால் செய்யப்படுகின்றன. மதத்தின் பெயரால் இந்த அட்டூழியங்களைச் செய்வது ஹிந்து மதத்தையே அவமதிப்பதாகும்" என்றும் ஜயப்பிரகாஷ் கூறியிருக்கிறார்.

"ஆங்கிலத்தை நாம் கசடற கற்க வேண்டும்"

உரும்பராய் கதம்ப விழாவில் ஸி. தியாகலிங்கம் கியு. ஸி.

யாழ்ப்பாணம், திங்கள்

"ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழியாக விளங்குவதால், ஆங்கிலத்தை நாம் கசடறக் கற்கவேண்டும். ஆங்கிலமொழியை நாம் பயில்வதால் எமது தாய்மொழியை நாம் புறக்கணிக்கின்றோம் என்பது அர்த்தமல்ல"

நேற்று முன்தினம் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை முன்றலில் நடைபெற்ற கதம்பவிழாவுக்கு தலைமைவகித்துப் பேசிய திரு. ஸி தியாகலிங்கம் கியு ஸி., மேற்கண்டவாறு கூறினார். உரும்பராய் இந்துக்கல்லூரி விளையாட்டு நில, நூல் நிலைய அபிவிருத்திக்காக இக்கதம்பவிழா நடத்தப்பட்டது.

திரு. ஸி. தியாகலிங்கம் கியு. ஸி., தொடர்ந்து பேசுகையில் தற்போதைய அரசியற் துவேஷத்துக்கும் மனஸ்தாபங்களுக்கும் அரசாங்க உத்தியோக அவாவும் வருவாயுமே அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன என்றும் இவை அற்றுப்போனபின், ஆங்கில மொழியே இலங்கை மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மொழியாக விளங்குமென்றும் கூறினார்.

எதிர்காலப் பிரஜைகளான நீங்கள் ஆங்கிலத்தை திறம்பட கற்கவேண்டும். இலங்கையிலே எமக்குப் பல பிரச்னைகள் இருப்பதால், எமது பிள்ளைகள் ஆங்கிலத்தில் மிகவும் திறமைவாய்ந்தவர்களாக வரவேண்டும். ஆங்கில அறிவு, மாணவ மாணவிகளுக்கு அவசியம் தேவை என்றும் அவர் வற்புறுத்தினார்.

ஒழுக்கம், கடமை உணர்ச்சி, வெற்றி தோல்விகளை சமமாக நோக்கும் மனம் ஆகியவை விளையாட்டு மைதானம் கற்றுத் தரும் பாடங்களாகும். எந்த நோக்கத்திற்காக இங்கு நாம் கூடி இருக்கின்றோமோ அம் முயற்சி வெற்றி பெறுவதாக என்றும் அவர் கூறினார்.

கதம்பவிழாவில் இடம்பெற்ற இசை, நடனம் மற்றும் தெய்வத் தமிழ்மொழிக்கு உரிமை கிடைத்திட வேண்டுமென்று ஆரம்பித்த பாடலுடனான கிராமிய நடனமும், ஹாஸ்ய, சமூக நாடகங்களும் பாராட்டக்கூடியதாக விருந்தன. கொக்குவில் நடனகலா மன்றத்தினரின் பரத நாட்டியம் சிறப்பாக விருந்தது. இவைகளுடன் குழந்தைகளின் மல்யுத்தம், பைலா நடனம், காவடி ஆட்டம், தேர்த்திருவிழா ஆகியவற்றுடன் சுவாமி விவேகானந்தர் பற்றிய சிறுமியின் துடிப்பான பேச்சும் ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றன.

கொலை செய்ததாக குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்புத்துறை கொலை வழக்கு நேற்றுக் காலை நீதிபதி அரசவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிபதி இவ்வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 4-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் கண்டிக்குழி பண்டியந்தாழ்வைச் சேர்ந்த மூன்று சகோதரர்களான, ராஜரத்தினம், யோகரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரும் கனகசபை, மயில்வாகனம், ஆகிய இருவரும் யோசப் செல்வரத்தினம் என்பவரைக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதல் மூன்று எதிரிகள் சார்பிலும் திரு. ரி. கனகசிங்கம், திரு. ஏ. விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். 4-ம், 5-ம் எதிரிகள்சார்பில் திரு. எம். பாலசுந்தரம், திரு. ஆர். ஜி. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

மாணவர்களின் சுற்றுப்பிரயாணம்

தண்ணீருற்று, சனி

வவுனியா வட்டாரத்தில் உள்ள நொச்சிக்குளம் நேரிய குளம் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் ஆசிரியர்களும் மேல் வகுப்பு மாணவர்களும் தலைமையாசிரியர் திரு. பே. இராயப்பு தலைமையில் கல்வி சம்பந்தமான சுற்றுப்பிரயாணம் ஒன்றைச் சமீபத்தில் நடத்தவிருக்கின்றனர்.

சிகிரியா, டம்புலை, மிதுந்தலை உட்பட கொழும்பு, கண்டி நுவரேலியா, அநுராதபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சகல சரித்திர, பூமிசாஸ்திர, கலாச்சார சம்பந்தமான பகுதிகளையும் இவர்கள் பார்வையிடுவார்கள் எனத் தெரிகிறது.

மோசடி வேலைகளில் தபால் சிப்பந்திகள்

கொழும்பு, ஞாயிறு

அதிகமான போஸ்டல் ஆர்டர், மணி ஆர்டர் மோசடிகளில் தபால் ஊழியர்களும் சம்பந்தப்பட்டுள்ளார்களென பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இவ்வித மோசடிகளில் சம்பந்தப்பட்டிருந்ததாக சமீப காலங்களில் பல தபால் சிப்பந்திகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள்.

இவ்வித மோசடிகளைத் தடுப்பதற்காக பொலிஸார் கடும் நடவடிகை எடுத்துள்ளார்கள்.

'டட்லி அனுமானைப்போன்றவர்'

கொழும்பு, ஞாயிறு

'எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா பொலிசுக்குத் தகவல் தெரிவிக்கும் அபாயகரமான பேர்வழி' என எம். ஈ. பி. யின் வாரப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

திரு. டட்லி சேனநாயக்கா, வாலில் நெருப்பைப்பற்ற வைத்துக்கொண்டு அங்குமிங்கும் திரிந்த அனுமான் போன்று இரகசியப் பொலிஸாரிடம் சென்று இரகசியம் பேசிவிட்டு பின் ஸ்ரீ கோதாவுக்குச் சென்று தமது சகாக்களைச் சந்தித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளிவிட்டுக்கொண்டிருக்கிறாரென்றும் இப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

திரு. டட்லி தம்மைப்பற்றிய இரகசியத்தை மறைத்துக் கொண்டு மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பமுனைகிறாரென்றும் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதனால் பெரும்நோயாளர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

காங்கேசன்துறை, ஞாயிறு

அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த 23 வயது இளைஞர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

முத்தையா அமிர்தலிங்கம் என்னும் இளைஞரே தற்கொலை செய்துகொண்டவராவர். காலஞ்சென்றவர் தனது விருப்பத்தின்படியே தற்கொலை செய்துகொள்வதாக எழுதி வைத்துள்ளார்.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். டி. நடராசா விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

'ஸ்ரீ மனோகரா'

யாழ்ப்பாணம், ஞாயிறு

புதுவருட தினத்தன்று யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டர் 'ஸ்ரீ மனோகரா' என்ற பெயரில், புதிய படங்களைக் காண்பிக்கத் தொடங்கும். சாவித்திரி, நாகேஸ்வரராவ், நாகையா முதலியோர் நடிக்கும் 'அனுராதா' என்ற தமிழ்ப் படம் அன்று காண்பிக்கப் படும்.

இப்புது முயற்சியில் ஜெஸீமா என்டெர் டெயின்மென்ட்ஸ் சர்கியூட் ஸ்தாபனத்தார்கள் இறங்கியுள்ளனர். இது இலங்கையில் தோன்றியுள்ள ஐந்தாவது சர்கியூட். கொழும்பு ஏ. வி. ஆர். ஏ. கம்பனி, அசோகா பிலிம்ஸ் ஆகியவற்றின் சொந்தக்காரரான திரு. வி. இராமநாதன் இம் முயற்சிக்குப் பெரும் ஆதரவு அளித்து வருவதாகத் தெரியவருகிறது.

"தமிழ் பேசும் மக்களுக்கு . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே நேரத்தில் கண்டி, காலி, குருநாகல், பதுளை, கேகாலை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் தொழில் நுட்பப் பாடசாலை ஆரம்பித்திருப்பதும் ஆரம்பிக்கவிருப்பதும் மிருகத்தனமான பாரபட்ச நடவடிக்கை என்பதனை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். ஆகவே உடனடியாகக் கிழக்கு மாகாணத்தில் ஒரு தொழில்நுட்பப் பாடசாலையை மட்டக்களப்பில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கொழும்பிலிருக்கும் நுண்கலைக் கல்லூரியில் சகல போதனைகளும் சிங்கள மொழியில் நடைபெற்றுவருகின்றது. அதேசமயத்தில் அக்கல்லூரியில் வருடா வருடம் மாணவர்களைத் திரட்டும் போது தமிழ்பேசும் மாணவர்கள் மிகவும் குறைவாகவே சேர்க்கப்படுகிறார்கள். இந்நாட்டில் வசிக்கும் தமிழ்பேசும் இனத்திற்குத் தமது அருங்கலையைக் கற்பதற்கு ஆர்வம் இல்லையா என்று உங்களைக் கேட்க விரும்புகிறோம். எம்மைத் தடுப்புக்காவலில் அடக்கியொடுக்கி வைத்திருந்த சமயத்தில் 1961ம் வருடத்தில் நடைபெற்ற சிம்மாசனப் பிரசங்கத்தில், யாழ்ப்பாணத்தில் நுண்கலைக்கல்லூரி ஆரம்பிப்பதாகக் கூறியது வானொலி மூலம் காற்றில் பறந்துவிட்டதா?

தமிழ்பேசும் மக்களுக்கு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் பரந்த அரசினரின் நிலத்தில் ஒரு நுண்கலைக் கல்லூரியை உடனடியாக ஆரம்பிக்கவும், அது ஆரம்பித்துச் செயற்படக் காலதாமதம் ஏற்பட்டால் தமிழ்பேசும் மாணவர்கள் கல்லூரி இயங்கும் வரைக்கும் நுண்கலைகளை இந்தியா சென்று படிப்பதற்கு உடனடியாக அனுமதிகொடுக்கவும்.

தென் வியட்னாம் பௌத்தர்களுக்கு ஐ. நா. சபையில் கண்ணீர் வடித்த அரசாங்கம் தமிழ்பேசும் மக்களை கல்வியில் நசுக்குவது மிருகத்தனமான கொடூரமான பாரபட்ச நடவடிக்கை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆகவே இப்பாரபட்ச நடவடிக்கையை உடனடியாகக் கைவிட்டு மேல் குறிப்பிட்ட மூன்று கோரிக்கைகளையும் நடைமுறைக்குக் கொண்டு வருக."

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதம மந்திரி, தொழில்நுட்பக்கல்லூரி இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இன்று

முன்னாள் வைத்திய அத்யட்சகரும்
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாகிகள் சபைத்
தலைவருமான
டாக்டர் நே. நாகரத்தினம் அவர்கள்
L. M. S. (Cey.) D. T. M & H. (Lond.) L. R. C. P. & S. (Edin.) L. R. F. P. & S. (Glasgow)

மாலை 4-30 மணிக்கு
யாழ்ப்பாணம், 420, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க
கட்டிடத்தில்
திறந்து வைப்பார்.

உத்தரவு பெற்ற Bata விற்பனையாளர்கள்

வானொலிநிகழ்ச்சிகள்

கொழும்பு

திங்கள் 30-3-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல் — எஸ். ஸ்ரீதாஸ்.

இரவு 7-15 பாட்டு — மோகனும்பிகை கணேசன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சிகள், 9-15 தேர்ந்தஇசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 வாத்தியஇசை, 10-00 நீங்கள் கேட்டவை.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்தியஇசை, 7-30 திருச்செந்தூர் ஆர். சரவணமுத்து — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திருச்செந்தூர் ஆர். சரவணமுத்து — பாட்டு. 1-30 வாத்தியஇசை, 1-50 கதம்பம், 2-10 வேலை தேடித்தரும் ஸ்தாபனம் கொடுக்கும் ஆலோசனை வசதிகள் — பேச்சு, 2-30 சீதாபாலகிருஷ்ணன் — வீணை, 2-40 பொன்னொளிர் பாரதம் — தொடர் நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்படஇசை, 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள், 7-50 நமது தபால்பெட்டி, 8-00 தாள வாத்தியக்கச்சேரி, 8-15 சீதாபாலகிருஷ்ணன் — வீணை, 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 வெற்றிவாகை தொடர் நிகழ்ச்சி, 9-30 சாரதா நடராஜன் — பாட்டு.

விளையாட்டுப்போட்டி

சுழிபுரம், ஞாயிறு

மாதகல் புனித சூசைவழனார் ஆங்கிலப் பாடசாலை இல்லங்களின் விளையாட்டுப்போட்டி, பாடசாலை விளையாட்டுத்திடலில் நடைபெற்றது. வலி மேற்கு காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பாடசாலை கொடியேற்றலைவபவத்துடன் போட்டிகள் ஆரம்பமானது. முதலாவது இடத்தை பெற்ற பாண்டியன் இல்லம் 146 புள்ளிகளைப் பெற்றது. இரண்டாம் இடத்தை சோழன் இல்லம் (136 புள்ளிகள) பெற்றது.

கடற்தொழிலாளர் கூட்டம்

கைதடி, ஞாயிறு

ஸ்ரீ மகாவிஷ்ணு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 12-வது வருடாந்தக் கூட்டம் கைதடி நாவற்குழி மகாவிஷ்ணு அரசினர் பாடசாலையில் யாழ். கிழக்கு கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது.

சாவகச்சேரி பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் இக்காலப் பொருளாதாரப் பிரச்சினையை எடுத்துக்கூறி, தமிழர் முன்னேறுவதற்கு இத்தகைய தொழில்கள் வளரவேண்டுமென்று வற்புறுத்தியதுடன் பாடசாலைப் பிள்ளைகளையும் ஆசிரியர்களின் தொண்டையும் பாராட்டிப் பேசினார். தென்மராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை பேசுகையில், நாட்டுவளர்ச்சிக்கான முயற்சிகளில் இச்சங்கம் ஈடுபட்டு உழைத்து வருவதை புகழ்ந்து இப்பகுதி மக்களின் ஒற்றுமையையும், சமாதான வாழ்க்கையையும் எடுத்துக்கூறி இன்னும் வளர்ச்சிக்கு வேண்டிய வழிவகைகளையும் எடுத்து விளக்கினார். நாவற்குழி கிராம சபைத் தலைவர் திரு. வே. சிவசுப்பிரமணியம், ஆசிரியர் நா. இளையப்பா, கிராமசேவகர் திரு. பொ. நமசிவாயம், தலைமையாசிரியர்கள் திருவாளர்கள் வி. எஸ். கந்தையா, நா. பொன்னம்பலம் ஆகியோரும் சங்கத்தின் வளர்ச்சி, ஒற்றுமை ஆகியவற்றைப் பற்றி விரிவாக பல புத்திமதிகளை எடுத்துக் கூறினர். மாணவர்களின் கூட்டுறவு சம்பந்தமான பல நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

'தமிழ்ப் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாலை மாணவி செல்வி மு. சித்திரஜீய.

கீழ் பிரிவில் பரிசு பெற்றவர்கள் விபரம் வருமாறு:-

1-ம் இடம்

மன்னார் சித்திவிநாயகர் வித்தியாசாலை மாணவன் க. கதர்மசீலன்.

2-ம் இடம்

சு. இராஜவி கிரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை.

3-ம் இடம்

குரும்பசிட்டி மகாதேவன் வித்தியாசாலை மாணவன் ச. குருகுலசிங்கம்.

தகுதிப்பரிசுகள் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

திருநெல்வேலி கிழக்கு சன சமூகநிலையத்தைச் சேர்ந்த இ. ரஞ்சனு.

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை மாணவர்கள் செல்வன் பொ. முருகதாஸ், செல்வன் சிவானந்தன்.

அளவெட்டி ஞானோதயா வித்தியாசாலை மாணவன் புராந்தகன்.

ஏழாலை அரசினர் மகளிர் வித்தியாசாலை மாணவி நா. ஜெயலட்சுமி.

வயாவிழான் அரசினர் மகா வித்தியாசாலை மாணவி து. தயாநிதிதேவி.

வல்வை சனசமூகநிலையத்தைச் சேர்ந்த செல்வன் மாணிக்கதாஸ்.

குரும்பசிட்டி மகாதேவன் வித்தியாசாலையைச் சேர்ந்த மாணவி செல்வி க. வனஜா.

அடுத்த நிகழ்ச்சியாக திரு. பொன்னையா அவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்தாபனங்களை நிர்வகித்து வந்த அதிபரும் சன்மார்க்கசபையின் ஸ்தாபக அங்கத்தவருள் ஒருவரும் 500க்கு மேற்பட்ட புஸ்தகங்களை சன்மார்க்கசபை வாசிகசாலைக்கு உதவியவருமான காலஞ்சென்ற திரு. கோ. அப்பாக்குட்டியின் படத்திறப்பு வைபவம் திரு. கனகசெந்திநாதன் தலைமையில் ஆரம்பமானது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் இரு தினங்களுக்கு முன் காலமானவரும் சபையின் வளர்ச்சியில் மிக முன்னேடியாக விளங்கியவருமான திரு இராமலிங்கத்துக்காக இருநிமிடங்கள் மௌனம் அனுடிக்கப்பட்டது.

அரு. அப்பாக்குட்டி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து திரு. ஹண்டி பேரின்பநாயகம் பேசினார்.

குறிப்பு இல: L A 1209.

காணி எடுத்தற்சட்டம் (அத்தியாயம் 460)

7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க்காணு அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற்பத்திரிகை இலக்கம் 13,996 (பகுதி III-ல்) பார்க்கவும்.

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பெயர்: பகுதி வலிகாமம் மேற்கு

கிராமத்தின் பெயர்: மானிப்பாய்

காணியின் பெயர்: செல்லர் வளவு

ஆரம்பப்பட இல: துண்டு இல; ஆரம்பப்பட இல. A 2430ல். துண்டு 1.

ஆ. பெருமைனார்,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

உடுவில் கிராமசபை அறிவித்தல்

1964-ம் ஆண்டு சித்திரை மாசம் 11-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி வரையும் மல்வம் ஒழுங்கையைத் திருத்துவதற்கு ரெண்டர்கள் அழைக்கப்படும். ரெண்டர் பத்திரங்கள் ரூபா 25/- கட்டி சித்திரை மாசம் 9-ம் திகதி பகல் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

ச. முத்துலிங்கம்,
தலைவர்.

உடுவில் கி. ச. காரியாலயம்,
சுன்னாகம்,
28-3-64. 132

கைப்பந்தாட்டம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டிக்கும் சிதம்பராக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் சிதம்பராக் கல்லூரி வெற்றியீட்டியது. புள்ளிவிபரங்கள் பின்வருமாறு. சிதம்பராக் கல்லூரி 15, 15, 15. உடுப்பிட்டி 16, 6, 5.

உடுப்பிட்டிக்கும் ஹாட்லிக்கும் இடையே நடைபெற்ற போட்டியின் புள்ளி விபரங்கள் பின்வருமாறு: உடுப்பிட்டி 15, 1, 15, 15. காட்லி 12, 15, 14, 5.

அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீர்வேலி காளி அம்மன் கோவிலில் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முடிவடையும். பத்து நாட்களும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஆங்கிலத் தினசரிகளும் சிங்களத் தினசரிகளும் ஏன் அலட்சியம் செய்துவிட்டதாக ஓர் அன்பர் புகார் கூறுகின்றார். இந்த அலட்சியத்துக்கு என்ன காரணம்? அறியாமையா? அவர் சைவசமயத்தைச் சேர்ந்தவரென்பதா? காரணம் எதுவாயினும் இது பெரும் தவறு. இவ்வித தவறுகள் இனி ஏற்படக்கூடாது. பத்திரிகைக் கமிஷன் இதைச் சற்றே கவனிப்பது நல்லது.

* * *

மனைதுறந்த வல்லமனார் தங்கள் பொய்யும் மாண்புரைக்கும் மனக்குண்டர் தங்கள் பொய்யும், சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும் மெய்யென்று கருதாதே போதநெஞ்சே, பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை அவன் பற்றே பற்றாகக்காணில் அல்லால், கனைகடலின் தென்கழிசூழ் அந்தண்நானகைக்காரோணத்தெஞ்ஞான்றுங் காணலாமே.

—திருநாவுக்கரசர்.

நிறுத்துங்கள்!

தரம் குறைந்த மைகளினால் உங்கள் பேனையை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனையைப் பாதுகாக்கும் சொல்வ் × உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனைகளைப் புத்துணர்ச்சியுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உதவுகின்றது.

இது ஒரு
பார்க்கர் பேனா
கம்பனியின் உற்பத்தி

உலகெங்கிலும் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

ரீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
From Friday 27th March 1964
Daily at 4-45, 7-00 & 9-45 p. m
Morning Shows
Sat & Sun at 10-30 a. m.
● Basil Rathbone
● Anne Helm
IN
THE MAGIC SWORD
(Eastman Colour)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள 6 வோல்ற் பற்றறிகள் விற்பனைக்கு உண்டு. முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், 6/8, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 78

அரைச்சலர்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலர். 62

ரேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. கலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

மாணவர் தகுதி அறிக்கை

தவணைப்பரீட்சைப் பெறுபேறு குறிக்கும் மாணவர் தகுதி அறிக்கை100-க்கு ரூ.15/- பாடசாலை விலாசம் அச்சிட ரூ. 3/- மேலதிகம். முற்பணத்துடன் ஓடர் அனுப்புக. கலாபவன அச்சகம், பருத்தித்துறை. 65

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை

விசேட பயிற்சிகள் 1964

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் முதலிய பாடங்களுக்குரிய தீவிர பயிற்சி வகுப்புகள் ஆனைப்பந்தியடி உயர் கலைக் கல்லூரியில் 1-4-64 முதல் ஆரம்பமாகும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

84 — மனேஜர்.

தாச்சிப்போட்டி

சுழிபுரம், சனி

வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் தமிழ் புதுவருடப் பிறப்பு அன்று தொடக்கம் மாபெரும் தாச்சிச்சற்றுப் போட்டி ஒன்று நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்துள்ளனர். இப்போட்டியில்க அநேக விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ள இருக்கின்றன.

மொண்ட் பிளாங்க்

இலங்கையின் பிரீதிகரமான கட்டிப் பால்

ஏஜெண்டுகள்

அப்துல்ஹமீது செய்ன் ஐபோர்ஜ்

192, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

STR.

"தமிழுக்கு உரிய இடம் அளிப்பதே நோக்கம்"

அரசாங்கத்தின் கொள்கை பற்றி இலங்கரத்ன

கொழும்பு, ஞாயிறு

"சிங்களத்தை உத்தியோக மொழியாக அமுல் நடத்தும் அதே வேளையில், தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிப்பது தான் அரசாங்கத்தின் நோக்கம்" என நிதி மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருக்கிறார்.

"நமது பிரஜைகளின் சுய மரியாதைக்குப் பங்கமின்றி இந்த மாறுதல் அமுலாக வேண்டும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும். இதை பொதுமக்கள் மனதிலிருத்திக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றும் திரு. இலங்கரத்ன கேட்டிருக்கிறார்.

"சிங்களத்தில் தகுதி பெறாதவர்கள் பொதுநலனை முன்னிட்டு சேவையில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட வேண்டும். யார் யாரை சேவையில் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை இலாகாத் தலைவர்கள் அறிவிக்கவேண்டும்" என்றும் அவர் தனது சுற்றறிக்கையில் கூறியிருக்கிறார்.

உச்சி மகாநாட்டில் 70 நாடுகள் கலந்துகொள்ளும்?

மண்டலசார்பற்ற தூதர் மகாநாடு முடிவு

கொழும்பு, ஞாயிறு

கொழும்பில் நடைபெற்ற மண்டலசார்பற்ற மகாநாட்டுக்கான. தூதர்களின் ஆயத்தக் கூட்டம் நேற்றிரவு முடிவடைந்தது. அக்டோபர் மாதம் கெய்ரோவில் நடைபெறவிருக்கும் உச்சி மகாநாட்டில் கலந்துகொள்ள 70 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகாநாட்டு முடிவுக்குப் பின் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில், பெல்கிரேட் மகாநாடு விடுத்த பிரகடனத்தை மீண்டும் ஊர்ஜிதப்படுத்துவதாயும், மண்டலசார்பற்ற கொள்கையில் தங்களுக்குள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாயும் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

சர்வதேச விவகாரங்களில் மண்டலசார்பற்ற கொள்கையின் முக்கியத்துவம் பற்றியும், இந்தக் கொள்கையின் வளர்ச்சி பற்றியும் பிரதிநிதிகள் திருப்தி தெரிவித்தனர்.

மண்டலசார்பற்ற கொள்கையை மேலும் பரப்புவதின்மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாக்க விரிவான அடிப்படையில் மண்டலசார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாடு நடைபெறவேண்டும் என தங்கள் அரசாங்கத்தின்சார்பாக பிரதிநிதிகள் ஏகமனதாகத் தீர்மானித்ததாக அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய இடதுசாரி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னரான டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா திரு. லெஸ்லி குணவர்தன, பெர்னாட் சொய்சா ஆகியோர், தீவிர வாதக் கோஷ்டியினரான திரு. எட்மண்ட் சமரக்கொடி, திரு. பாலாதம்பு ஆகியோருடன் சேர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்துகொள்ளவேண்டுமென யோசனை தெரிவித்த டாக்டர் என். எம். பெரேராவின் கோஷ்டியினரின் கருத்தை நிராகரித்தனர்.

நேற்றுக் காலை திரு. பாலாதம்பு கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்தார். சமசமாஜக் கட்சி அரசாங்கத்துடன் இப்பொழுது சேர்ந்துகொள்ளுமானால் கட்சிக்கு இழுக்குத் தேடுவதாக இருக்குமென்றும் தொழிற்சங்கங்களின் 21 கோரிக்கைகள் என்ன ஆவது என்றும் அவர் கேட்டார்.

அரசாங்கத்துடன் சேர்ந்து கொள்வதால் தான் நல்ல திட்டத்தை விரைவில் அமுல் நடத்தக்கூடியதாக இருக்குமென டாக்டர் என். எம். பெரேராவின் கோஷ்டி தெரிவித்தது.

ஏமன் மீது பிரிட்டிஷ் தாக்குதல்

25 பேர் பலி

லண்டன், மார்ச் 29

8 பிரிட்டிஷ் 'ஹன்டர்' விமானங்கள் ஏமன் கோட்டைமீது தாக்குதல் நடத்தியதால் பெண்கள், குழந்தைகள் உட்பட 25 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது. ராக்கெட்டாலும், பீரங்கியாலும் நடத்தப்பட்ட 10 நிமிஷ தாக்குதலில் ஏமன் கோட்டை முற்றாக நாசமானதாகவும் அறிவிக்கப்பட்டது. ஏடனுக்குள் ஏமன்வாசிகள் ஊடுருவல் நடத்தியதற்குப் பதிலாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாய் பிரிட்டிஷ் வட்டாரங்கள் கூறின. ஏமன் இதுசம்பந்தமாகப் பாதுகாப்புச் சபைக்குப் புகார்செய்யவிருக்கிறது.

சமயக் கருத்தரங்கின் தீர்மானம்

நல்லூர், திங்கள்

சைவ மக்களை நல்வழிப்படுத்தும் வகையில் சைவப்பெருமன்றம் ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சமயக் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டுள்ளது,

மலாயா சைவ சித்தாந்த கழகத் தலைவர் திரு. கா. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சைவப்புலவர் சங்கம், சைவ பரிலான சபை, சைவாசிரியர் சங்கம் அகில இலங்கை சைவ இளைஞர் மகாசபை ஆகிய நான்கு சபைகளும் சேர்ந்து சைவச் சங்கங்களை அழைத்து சைவப் பெருமன்றம் கூட்டி சைவக் கருத்தை ஒரேநோக்காகச் செய்தல் வேண்டும் என்ற தீர்மானம் வழக்கறிஞர் திரு. நம. சிவப்பிரகாசத்தால் கொண்டுவரப்பட்டு திரு. மு. வைத்திலிங்கத்தினால் அனுமதிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் திரு. த. குமாரசுவாமிப்புலவர் சமர்ப்பித்த கருத்துக்கள் வாசிக்கப்பட்டன.

'சமயக்கல்வி வளர்ச்சியடைய வேண்டுமானால் இளைய உள்ளங்களிற் சமயக் கருத்தினைப் பதியச் செய்தல் வேண்டும். ஆசை முதலான அழுக்குகள் படியாத தூய இளம் உள்ளம் அக்கருத்தைப் பற்றிக் கொள்ளும்.

கல்லூரிப் படிப்பில் மாத்திரம் நின்றுவிடாது எத்தனை உயர்ந்த பட்டங்களாயினும் அவற்றைப் பெறுதற்குரிய சர்வகலாசாலைப் படிப்பு வரையிலும் சமயக்கல்வி தொடர்ந்து பயிற்றிவருதல் வேண்டும். அங்ஙனம் பயின்று வந்தால் சமய அறிவு வளரும். அந்த அறிவை நிலைபெறச் செய்வதற்கு உறுதுணையாக அமைவன சாதனைகள் புத்தகப்படிப்பால் மட்டும் சமய அறிவு வளரும் என்றோ நிலைபெறும் என்றோ கருதிவிட முடியாது.

சதியா?

கொழும்பு, ஞாயிறு

நிக்கவரெட்டியா முன்னாள் எம். பி. திரு. முதியான்சே தென்னக்கூனுக்கு வழங்கப்பட்ட தேநீரில் ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள் ஏதேனும் கலக்கப்பட்டிருந்தது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

திரு. தென்னக்கூன் தமக்கு வழங்கப்பட்டதே நீரை நிக்கவரெட்டியா விவசாய கமிட்டித் தலைவர் திரு. ஜெயசுந்தராவுக்குக் கொடுத்தார். திரு. ஜெயசுந்தரா அதைஅருந்தியபோது அவர் மயக்கமுற்றுகீழே விழுந்தார் இதைத்தொடர்ந்துநிக்கவரெட்டியா கூட்டுறவு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த திரு. ஜெயசுந்தரா இப்போது குணமடைந்து வருவதாக அறியப்படுகிறது.

தமிழரசு செயற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கோரியுள்ளது.

தமிழரசுக்கட்சியின் செயற்குழுவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சிங்கள மக்களின் சகல உரிமைகளும் தங்களுக்கிருக்கிறதென்று தமிழ்ப்பேசும் மக்கள் கருதும் காலம் வரவேண்டும். தமிழ்-சிங்களவர் சம்பந்தமான பல பிரச்னைகளில் குறிப்பாக மொழிச் சட்டத்தில் சரியான தீர்வு காணப்படும்வரை இலங்கையின் எந்த ஒரு அரசாங்கமும் நிலையாக, அமைதியுடன் ஆட்சி செலுத்த முடியாது. இதன் விளைவாக நாட்டின் பொருளாதாரத்தினால் எந்த வித முன்னேற்றமும் காண முடியாது.

எமது அடிப்படையான பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளதாக நாம் அறிகின்றோம். இதை வரவேற்கின்றோம். இப்பிரச்னைகள் சம்பந்தமாக எம்மையும், மற்றைய பார்லிமெண்ட் தலைவர்களையும் சந்தித்து ஆலோசனை நடத்துமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

அரசாங்கத்தின் பாரபட்சமான, பலிவாங்கும் நோக்கம் கொண்ட சட்டங்களினால் நூற்றுக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தனிச் சிங்கள சட்டத்தினால் ஏராளமான தமிழ் அரசாங்க ஊழியர்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர் இதனுடன் கட்டாய ஓய்வு உத்தரவினால் இன்னும் பல ஊழியர்கள் பாதிக்பட்டுள்ளனர். இச்செயல், தமிழ்பேசும் பகுதிகளில் தனிச் சிங்களச் சட்டத்தை அரசாங்கம் அமுல்செய்கிறதென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

தமிழ்ப்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு அனுப்பப்படும் கட்டாய ஓய்வு சம்பந்தமான உத்தரவுகள் நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே அனுப்பப்பட்ட கட்டாய உத்தரவுகளும் வாபஸ் பெறப்பட்டு அவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படல் வேண்டும். இதனுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நாட்டிலுள்ள தமிழ்ப்பேசும் மக்கள் மீதும் அரசகரும மொழிச் சட்டம் திணிக்கப்படுவதும் நிறுத்தப்படல் வேண்டும்" இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண அரசாங்கம் முன்வராத வகையில் அரசாங்கத்துடன் எந்த விதமான பேச்சுக்களுக்குமோ உடன்படிக்கைகளுக்குமோ தமிழரசுக்கட்சி செல்லாது என்றும் இச்செயற்குழு உறுதியாகக் கூறுகின்றது."

ராதாகிருஷ்ணன் அனுதாபம்

புதுடில்லி, மார்ச் 29

அலாஸ்கா பூகம்பத்தினால் ஏற்பட்ட உயிர் நஷ்டம் குறித்து ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் ஸனுக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியிருக்கிறார்.

ஜப்பானுக்கு இலங்கை பௌத்த சின்னங்கள்

கொழும்பு, ஞாயிறு

ஜப்பானுக்கு பௌத்த சின்னங்கள் சிலவற்றை இங்கிருந்து அனுப்ப இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது

ஜப்பானிலுள்ள மூன்று முக்கிய பத்திரிகைகளில் ஒன்றான 'யோமியூரி சின்பன்' என்ற பத்திரிகையின் வேண்டுகோளுக்கிணங்கவே இவை அனுப்பப்படவிருக்கின்றன. இலங்கையிலுள்ள பௌத்த ஆலயத்தைப்போல் டோக்கியோவிலுள்ள யோமியூரியில் கட்டப்படவிருக்கும் ஆலயத்தில் இடம்பெறச் செய்வதற்காகவே இவற்றை அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டன.

ஆன்மசாந்திக்கு பிராத்தனை

நல்லூர், திங்கள்

சிவபதமடைந்த யோகசுவாமிகளின் ஆன்மசாந்திக்கான பிராத்தனை கீரிமலைச் சிவன்கோவிலில் நடைபெற்றது. பங்குனி உத்தரத்திருவிழாவும் வெகுசிறப்பாக அன்றைதினம் கொண்டாடப்பட்டது.

13 வயது சிறுவன் தற்கொலை

காங்கேசன்துறை, ஞாயிறு

கட்டுவனைச் சேர்ந்த 13 வயதுள்ள வீரவாகு சண்முகநாதன் தமது சகோதரருடன் ஏற்பட்ட வாக்கு வாதத்தைத் தொடர்ந்து நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பி. நடராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

ரயில் விபத்து

150 பேர் காயம்

டோக்கியோ, மார்ச் 24

மத்திய ஜப்பானில் இன்று பகல், எக்ஸ்பிரஸ் பிரயாணிகள் ரயில்வண்டி, மற்றுமொரு ரயிலுடன்மோதியதால்150பேர் காயமடைந்தனர். இவர்களில் சிவரின் நிலைமை கவலைக்கிடமாகவிருக்கிறது.

மாட்டுவண்டி

சவாரிப்போட்டி ரத்து

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை மூன்றாம் வட்டாரத்திலுள்ள பனை வாலிபர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இன்று ரத்துச் செய்யப்பட்டது. போட்டியாளர்கள், நிர்வாகக் குழுவினரின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாததினால்தான் போட்டி ரத்துச் செய்யப்பட்டதென்று அறிவிக்கப்படுகிறது. இதனால் நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

இப்போட்டி வருடா வருடம் நடைபெறுகிறதென்பது குறிப்பிடத் தக்கது.

25 கோடிடாலர் நஷ்டம்

வாஷிங்டன், மார்ச் 29

அலாஸ்கா பூகம்பத்தினால் ஏற்பட்ட நஷ்டம் 25 கோடி டாலர் என மதிப்பிடப்படுகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)

விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
எஸ். ஏ. அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்ஸர்ஸ்

பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணா
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
கதை-வசனம்: சக்திகிருஷ்ணசாமி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாத 30-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.